



## 200 தொகுதிகள் நிச்சயம்!

# 200-க்கு மேலே வெற்றி பெறுவது நம் இலட்சியம்!

**கோவையில் நடைபெற்ற மேற்கு மண்டல வாக்குச்சாவடி குழுவினரின் பயிற்சி மாநாட்டில்**

**கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சி உரை!**

**கோவை, மார்ச் 1 –**

**கோவையில் நடைபெற்ற மேற்கு மண்டல வாக்குச்சாவடி குழுவினரின் பயிற்சி மாநாட்டில் நேற்று முன்தினம், கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுச்சி உரையாற்று கையில் வரும் சட்டமன்ற தேர்தலில் 200 தொகு திகள் நிச்சயம்! 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறுவது நம் இலட்சியம்! என்றும் உறுதி பட தெரிவித்தார்.**

**கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (27-02-2026) கோவையில் நடைபெற்ற ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’ மேற்கு மண்டலக் கழக வாக்குச்சாவடிக் குழுவின ருக்கான பயிற்சி மாநாட்டில் ஆற்றிய உரை வருமாறு:-**

பாசக்கார மேற்கு மண்டலத்தில் உங்கள் எல்லோரையும் சந்திப்பதில் நான் மிகுந்த பெரும கிழ்ச்சி அடைகிறேன்! கோவை மண்ணில் காலையில் நான் கால் வைத்ததும் “ஏனுங்க தலைவரே சவுக்கியமா” என்று கேட்டு, பாசத்தில் நிறைத்து விட்டீர்கள்! அதிலும், கல்லூரி மாணவி கள், குடும்பங்கள் என்று திரண்டு வந்து நீங்கள் கொடுத்த வரவேற்பில் “நாம்தான் ஜெயிப்போம்” என்று இருநூறு சதவிகிதம் உறுதியாகிவிட்டது!

### பெரியார், அண்ணா, கலைஞர் வாழ்க்கையில் முக்கியமான நாள்!

இந்த கோவை மண் – பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் – பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோ ரது வாழ்க்கை வரலாற்றில் முக்கியமான ஊர், இந்த ஊர். பெரியாரை அண்ணா சந்தித்தது இந்த கோவை மண்டலத்தில்தான்! தலைவர் கலை ஞரை எம்.ஜி.ஆர். சந்தித்ததும் இங்குதான்! இந்தி திணிப்பிற்கு எதிரான போரில் பொள்ளாச்சி நிகழ்வை யாரும் மறக்க முடியாது. அப்படிப்பட்ட இந்தக் கோவை மண்ணில், கழகத்தின் வேர்க ளாக, கழகத்திற்கும் மக்களுக்குமான உறவுப்பா லமாகக் கழக வெற்றிக்கான அடித்தளமாக இருக் கும் வாக்குச்சாவடிக் குழுவினரான உங்களை எல்லாம் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மேற்கு மண்டல பாக முகவர்கள் பயிற்சிக் கூட்டத்தையே மாபெரும் மாநாடு போல் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறார் ஆருயிர் சகோதரர் செந் தில் பாலாஜி அவர்கள்! இவரது இந்த ஆற்றல்தான் எதிரிகள் பலரின் தூக்கத்தை கெடுக்கிறது. செந்தில் பாலாஜிக்கு அவர்கள் கொடுத்த குடைச்சல்களை வைத்தே இவர் எந்த அளவிற்கு எதிராளிகளுக்கு சிம்ம சொப்பனமாக இருக்கிறார் என்பதை உண ரலாம்.

செந்தில் பாலாஜி அவர்கள் அனுபவித்த தொல் லைகள் மாதிரி வேறு யாரும் அனுபவித்திருக்க மாட்டார்கள். மிரட்டலுக்கு பயந்து முதுகு வளைந்து கும்பிடு போடுபவர்களுக்கு இடையே இவர் எந்த மிரட்டலுக்கும் பயந்து அடிபணிய வில்லை! நெருக்கடிகளுக்கு தலைவணங்காமல், நெஞ்சுரத்தோடு எல்லாவற்றையும் எதிர்த்து நிற் கிறார். செந்தில் பாலாஜி அவர்கள் கழகத்திற்கும், தலைமைக்கும் உண்மையாக உழைத்துக் கொண்டிருக்கிறார். அந்தளவிற்குச் சிறப்பாகப் பணியாற்றி வரும் செந்தில் பாலாஜி அவர்களுக் கும், அவருக்குத் துணை நிற்கும் கழக நிர்வாகிகள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுகள், வாழ்த்துகள்!

### 7 லட்சம் வாக்குச்சாவடி குழுவினருடன் சந்திப்பு!

இந்த என் வாக்குச்சாவடி – வெற்றி வாக்குச்சா வடி பயிற்சி மாநாடுகளை, பிப்ரவரி 11–ஆம் தேதி திருவிடந்தையில் தொடங்கினோம்! அடுத்து, திருப்பத்தூர், மதுரையை தொடர்ந்து கோவை யில் நிறைவு செய்கிறோம். சுமார் ஏழு இலட்சம் வாக்குச்சாவடிக் குழுவினரை இப்படி சந்தித்திருக் கிறேன்.



இங்கு நான் வந்திருப்பது, உங்களை உற்சா கப்படுத்த மட்டுமல்ல. உங்களைப் பார்த்து, நானும் உற்சாகம் அடைவதற்கும், புத்துணர்வு பெறுவதற்கும்தான் வந்திருக்கிறேன். உங்கள் முகங்களைப் பார்க்கும்போது உங்களின் மகிழ்ச் சியும், எனர்ஜியும் எனக்கும் ட்ரான்ஸ்ஃபர் ஆகி றது! உங்கள் கான்ஃபிடன்ஸைப் பார்த்து, என்னு டைய கான்ஃபிடன்ஸ் லெவலும் அதிகமாகிறது!

இந்த மேற்கு மண்டலத்தில் 14 மாவட்டக் கழ கங்கள் 39 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கிறது. இது எல்லாவற்றிலும் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி பெற்ற செய்திதான் ரிசல்ட் அன்றைக்கு ஃபிளாஷ் நியூ ஸாக வர வேண்டும்! வெளிப்படையாகச் சொல்ல வேண்டும் என்றால், கடந்த சட்டமன்றத் தேர்த லில், இந்த மேற்கு மண்டலத்தைப் பொறுத்தவ ரைக்கும் நாம் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை! அதைச் சரிசெய்து மாபெரும் வெற்றியை பெற்றுத் தர வேண்டிய கடமையும், பொறுப்பும் இங்கு மேடையில் இருப்பவர்களுக்கு இருக்கிறது. எதிரில் கூடியிருக்கும் உங்களுக்கும் இருக்கிறது! செய்துவிடுவீர்களா? உறுதியாகச் செய்துவிடுவீர்களா?

### சட்டமன்றத் தேர்தலிலும் பெரிய வெற்றியை உறுதி செய்வோம்!

உறுதியாக... நிச்சயமாக... சத்தியமாக... அண்ணா மேல் ஆணையாக (செய்வோம் என்று கழகத்தினர் பதில்)

கடந்த 2024 நாடாளுமன்ற தேர்தலில் இந்த மண்டலத்தில் எப்படி பெரிய வெற்றியை பெற் றோமோ அதேபோல் பெரிய வெற்றியைச் சட்ட மன்றத் தேர்தலிலும் உறுதி செய்ய வேண்டும்.

அந்த அளவிற்கு மேற்கு மண்டலத்திற்குத் திட்டங் களை செய்து கொடுத்திருக்கிறோம்.

காலையில் கோவைக்கு வந்ததிலிருந்து, என் னுடைய நினைவில் இருக்கும் வரைக்கும் சொல் கிறேன்.

- பல்வேறு இடர்களைக் கடந்து அத்திக்கடவு - அவினாசி திட்டத்தை நிறைவேற்றி இருக்கிறோம்.
- கோவையில் I.T. பார்க் – செம்மொழிப் பூங்கா – ஜி.டி.நாயுடு மேம்பாலம், அவினாசி சாலை மேம் பாடு – விசைத்தறிக்கு 100 யூனிட் இலவச மின்சா ரம் – விசைத்தறி மற்றும் சிறு தொழில்களுக்கு மின் கட்டணக் குறைப்பு – விசைத்தறியை நவீ னப்படுத்த நிதி ஒதுக்கீடு – சாலை இல்லாத மலைக் கோயில்களுக்கு சாலை வசதிகள்
- இதுமட்டுமல்லாமல், கோவையில் தந்தை பெரி யார் பெயரில் மாபெரும் நூலகம் அமைய இருக்கிறது.
- உலக தரத்தில் கிரிக்கெட் ஸ்டேடியம் அமைய இருக்கிறது.
- வெள்ளலூர் பகுதியில் தொல்லியல் ஆய்வுகள் நடைபெற இருக்கிறது.
- தோழி விடுதிகள் கட்டப்பட இருக்கிறது.
- சூலூர் பகுதியில் செமி கண்டக்டர் தொழில் பூங்கா வரப் போகிறது.
- கோவை மாவட்டத்திற்கு 75 புதிய E-Bus வர போகிறது.
- மேற்கு புறவழிச்சாலை அமைக்கப்பட இருக்கிறது.

இன்னும் ஏராளமான திட்டங்கள் மேற்கு மண்டலத்திற்கு வர இருக்கிறது. எனவே, தொழில் முனைவோர் அதிகமாக இருக்கும் இந்த மேற்கு மண்டலம் வளர்ச்சியைத்தான் விரும்பும் என் பதை நாம் நிரூபிக்க வேண்டும்.

## தேர்தல் பணி: கடைசி நிமிடம் வரை ஓய்வின்றி பணியாற்றுவீர்!

### 2,6 கோடி வாக்குகளுக்கு மேல் சுலபமாகப் பெறலாம்!

இங்கு வந்திருக்கும் உங்களின் ஒவ்வொரு பூத்திற்கும் எவ்வளவு டார்கெட்? 350 வாக்குகள்! இந்த டார்கெட்டை அச்சீவ் செய்துவிட்டாலே, சுல பமாக, 2 கோடியே 60 இலட்சம் வாக்குகளுக்கு மேல் நாம் பெற்றுவிடலாம். இந்தத் தேர்தலில், நாம் 2 கோடியே 50 இலட்சம் வாக்குகளுக்குக் குறையாமல் பெற்றே ஆக வேண்டும்! இதைப் பெற்றுக் காட்டுவது உங்கள் பொறுப்பு! உங்க ளுக்கு என்ன வேண்டுமோ அந்த உதவிகளை செய்து தருவது என்னுடைய பொறுப்பு!

“2 கோடியே 50 இலட்சமா?” என்று பெரிய நம்பரை யோசித்து யாரும் ஷாக் ஆகாதீர்கள். இங்கு வந்திருக்கும் ஒவ்வொருவரும் ஆளுக்கு 40-50 வாக்குகளுக்குப் பொறுப்பேற்றுக் கொள் ளுங்கள்! நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுக்கு செட் செய்திருக்கும் டார்கெட்டை அச்சீவ் செய்து விட்டாலே போதும்! நான் சொன்ன நம்பர் வந்து விடும்! 200 தொகுதி நிச்சயம்! 200 தொகுதிக ளுக்கு கூடுதலாகவும் வெற்றி பெறுவதுதான் நம்முடைய இலட்சியம்!

அடுத்த 2 மாதம்! உங்களுக்கும் சரி – எனக் கும் சரி ‘No Rest’! ஒவ்வொரு வாக்காளரையும் நீங்கள் எல்லோரும் குறைந்தது 5 முறையாவது நேரில் சந்திக்க வேண்டும். இதை ஏன் சொல்கி றேன் தெரியுமா? என்னதான் வாட்ஸ்அப், இன்ஸ் டாகிராம் இப்படி புதுப்புது ஊடகங்கள் வந்தாலும், ஒருவரின் வீட்டுப் படியேறிச் சென்று, அவர்களி டம் கையெடுத்துக் கும்பிட்டுப் பணிவாக வாக்கு கேட்கும் பிரசாரத்திற்கு எதுவுமே ஈடாகாது! ஆன்-லைன், ஆன்-ஃபீல்டு இரண்டிலும் தி. மு.க.வின் செயல்பாடுகள்தான் நிறைந்திருக்க வேண்டும்!

### கடைசி நிமிடம் வரை மக்களுடன் சந்திப்பு!

பரம்பரை பரம்பரையாகத் தி.மு.க.விற்கு வாக்களிக்கும் குடும்பமாக இருந்தாலும் சரி, இது வரை நமக்கு வாக்களிக்காத குடும்பமாக இருந் தாலும் சரி, பிரசாரத்தின் கடைசி நிமிடம் வரை மக்களை நாம் சந்தித்துக்கொண்டே இருக்க வேண்டும்! சாதனைகளைச் சொல்லி, வாக்குறு திகளைச் சொல்லி, வாக்கு கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும்! இதை நீங்கள் ரிப்பீட் மோடில் செய்ய வேண்டும்! அப்போதுதான் நம்முடைய வெற்றியும் ‘ரிப்பீட்’ ஆகும்!

தேர்தல் அன்றைக்கு பூத்திற்கு வந்து வாக்கா ளர்கள் நமக்கு வாக்களிக்கும் வரை, ஓய்வே இருக்க கூடாது! வீடுவீடாகச் சென்று பணிவாக... கனிவாக... மரியாதையாக... நட்பாக அணுக வேண்டும்! ஏன் என்றால், என்றைக்குமே மக் கள்தான் எஜமானர்கள்! நாம் அவர்களின் சேவ கர்கள்! மக்களைச் சந்தித்து அவர்களின் குறைக ளைக் கேட்டு, அவர்களின் இன்ப துன்பங்களில் கூடவே நிற்பதால்தான், தேர்தலில் அவர்களும் நம்முடன் நிற்கிறார்கள்! 75 ஆண்டுகளாகத் தி. மு.க. வலிமையாக இருப்பதன் இரகசியம் இது தான்!

நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், இந்தி யாவிலேயே எந்த மாநில அரசும் செய்யாத அள விற்கு ஏராளமான சாதனைத் திட்டங்களை செய்து கொண்டிருக்கிறோம். பெண்களை எடுத் துகொண்டால் மாதம் ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத் தொகை. மகளிர் விடியல் பயணம், போன்ற திட்டங்கள். மாணவர்களை எடுத்து கொண்டால், புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் மூலமாகக் கல்லூரி மாணவ மாணவியருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் தருகிறோம்.

தொடர்ச்சி – 4 ஆம் பக்கம்

---

### நெஞ்சுரத்தோடு எல்லாவற்றையும் எதிர்த்து நிற்கிறார் - செந்தில் பாலாஜி



**மேற்கு மண்டல பாக முகவர்கள் பயிற்சிக் கூட்டத்தையே மாபெரும் மாநாடு போல் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறார் ஆருயிர் சகோதரர் செந்தில் பாலாஜி அவர்கள்! இவரது இந்த ஆற்றல்தான் எதிரிகள் பலரின் தூக்கத்தை கெடுக்கிறது. செந்தில் பாலாஜிக்கு அவர்கள் கொடுத்த குடைச்சல்களை வைத்தே இவர் எந்த அளவிற்கு எதிராளிகளுக்கு சிம்ம சொப்பனமாக இருக்கிறார் என்பதை உணரலாம்.**

**செந்தில் பாலாஜி அவர்கள் அனுபவித்த தொல்லைகள் மாதிரி வேறு யாரும் அனுபவித் திருக்க மாட்டார்கள். மிரட்டலுக்கு பயந்து முதுகு வளைந்து கும்பிடு போடுபவர்களுக்கு இடையே இவர் எந்த மிரட்டலுக்கும் பயந்து அடிபணியவில்லை! நெருக்கடிகளுக்கு தலைவணங்காமல், நெஞ்சுரத்தோடு எல்லாவற்றையும் எதிர்த்து நிற்கிறார். செந்தில் பாலாஜி அவர்கள் கழகத்திற்கும், தலைமைக்கும் உண்மையாக உழைத்துக் கொண்டிருக்கிறார். அந்தளவிற்குச் சிறப்பாகப் பணியாற்றி வரும் செந்தில் பாலாஜி அவர்களுக்கும், அவருக்குத் துணை நிற்கும் கழக நிர்வாகிகள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுகள், வாழ்த்துகள்!**

---

# தேசிய ஜனநாயகக் கூட்டணி கொள்கை இல்லாத கூட்டணி! இந்தியாவிற்கே எடுத்துக்காட்டு நம் கூட்டணி!